DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no:CC.No.89/2023**

**prosecution witness: PW-1**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

Accused present.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | அஜீத்குமார் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**27.12.2023**

முதல் விசாரணை:-

நான் மண்டபத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். சுமார் 6 மாதங்களுக்கு முன்பு இரவு 10.00 மணிக்கு எனது இருசக்கர வாகனம் TN 65 AJ 9420 என்ற எண் கொண்ட வாகனத்தை எனது வீட்டின் முன்பு நிறுத்தி வைத்திருந்தேன். மறுநாள் காலை வந்து பார்த்தபோது வாகனத்தை காணவில்லை. பின்பு அக்கம்பக்கத்தில் தேடிப்பார்த்துவிட்டு மண்டபம் காவல்நிலையம் சென்று நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.

பின்பு இரண்டு நாட்கள் கழித்து எனது இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டது. நான் நீதிமன்றத்தில் மனு செய்து எனது வாகனத்தை பெற்றுக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

நான் எனது புகார் மனுவிலும், போலீஸ் விசாரணையிலும் சொன்னததைத்தான் தற்போது முதல்விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். குற்றம்சாட்டடப்பட்டவர் எனக்கு யார் என்று தெரியாது. புகார் கொடுத்தபின்பு என்னை போலீசார் விசாரிக்கவில்லை. குற்ற வழக்கிற்கும், குற்றம்சாட்டப்பட்டவருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை, போலீசார்

முறையாக விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no:CC.No.89/2023**

**prosecution witness: PW-2**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

Accused present.

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ரவிச்சந்திரன் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**27.12.2023**

முதல் விசாரணை:-

நான் மண்டபத்தில் வசித்து வருகிறேன். போட் ஓட்டுநராக இருந்து வருகிறேன். அசா.1 எனது மகன் ஆவார். ஆஜர் எதிரியை தெரியாது. வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையில் கடந்த 17.05.2022-ம் தேதி இரவு 10.00 மணியளவில் அ.சா.1 அவரது இருசக்கர வாகனத்தை எனது வீட்டின் முன்பு நிறுத்தி வைத்திருந்தார் என்றால் சரியல்ல. மறுநாள் காலை வந்து பார்க்கும்போது வாசலில் நிறுத்திவைத்திருந்த இருசக்கர வாகனத்தை காணவில்லை என்றால் சரியல்ல. பின்பு அக்கம்பக்கத்தில் தேடிப்பார்த்துவிட்டு வாகனம் கிடைக்காததால் அ.சா.1 மண்டபம் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no:CC.No.89/2023**

**prosecution witness: PW-3**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

Accused present.

வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கல்யாணி | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

**27.12.2023**

முதல் விசாரணை:-

நான் மண்டபத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அசா.1 எனது மகன் ஆவார். அ.சா.2 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரியை தெரியாது. வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையில் கடந்த 17.05.2022-ம் தேதி இரவு 10.00 மணியளவில் அ.சா.1 அவரது இருசக்கர வாகனத்தை எனது வீட்டின் முன்பு நிறுத்தி வைத்திருந்தார் என்றால் சரியல்ல. மறுநாள் காலை வந்து பார்க்கும்போது வாசலில் நிறுத்திவைத்திருந்த இருசக்கர வாகனத்தை காணவில்லை என்றால் சரியல்ல. பின்பு அக்கம்பக்கத்தில் தேடிப்பார்த்துவிட்டு வாகனம் கிடைக்காததால் அ.சா.1 மண்டபம் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.